செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 196 நாள்: 6/4/18

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

சிறப்பு விளையாட்டு விடுதி மாணவ / மாணவியர் சேர்க்கை

### செய்திக் குறிப்பு

தமிழக அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலமாக கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கு விளையாட்டுத் துறையில் சாதனைகள் படைப்பதற்கு ஏற்ப விஞ்ஞானரீதியான பயிற்சி, தங்குமிடவசதி மற்றும் சத்தான உணவுடன் கூடிய சிறப்பு விளையாட்டு விடுதிகள் சென்னை மற்றும் தூத்துக்குடியில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி –சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் மற்றும் கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம்

மாணவியருக்கான விளையாட்டு விடுதி – சென்னை நேரு உள்விளையாட்டரங்கம் .

**விளையாட்டுத் தகுதிகள்**

- மேற்காணும் சிறப்பு விளையாட்டு விடுதிகளில் உள்ள விளையாட்டுக்களில் பயிற்சி பெற்று சிறந்த விளையாட்டு வீரர்களாக விளங்குவதற்கு 12–ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற / பயிலும் மாணவ/ மாணவியர் தகுதியுடையவர் ஆவர்.
- தனிப்போட்டிகளில் விண்ணப்பிப்பவர்கள் மாநில அளவில் குடியரசு / பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகள் / அங்கீகரிக்கப்பட்ட மாநில விளையாட்டுக் கழகங்கள் நடத்தும் போட்டிகளில் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது தமிழ்நாடு அணியில் தேர்வு செய்யப்பட்டு தேசிய அளவில் தேசிய விளையாட்டு சம்மேளனங்கள்/ இந்திய பள்ளி விளையாட்டுக் கூட்டமைப்பு (SGFI)/ மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம் நடத்தும் போட்டிகளில் கலந்து கொண்டவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- குழுப் போட்டிகளில் விண்ணப்பிப்பவர்கள் மாநில அளவில் குடியரசு/ பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகள் மாநில விளையாட்டு கழகங்கள் நடத்தும் போட்டிகளில் முதல் இரண்டு இடங்களில் வெற்றி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது தமிழ்நாடு அணியில் தேர்வு செய்யப்பட்டு தேசிய அளவில் தேசிய விளையாட்டு சம்மேளனங்கள்/ இந்திய பள்ளி விளையாட்டுக் கூட்டமைப்பு (SGFI) / மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம் நடத்தும் போட்டிகளில் கலந்து கொண்டவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- கையுந்து பந்து விளையாட்டில் 185 செ.மீ–க்கு மேல் உயரமுள்ள மாணவ/ மாணவிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- 2018–2019–ஆம் ஆண்டிற்கான சிறப்பு விளையாட்டு விடுதியில் சேர்வதற்கு கீழ்காணும் விளையாட்டுகளில் மாணவ/ மாணவியர் சேர்க்கை நடைபெற உள்ளது.

மாணவர்களுக்கான விளையாட்டுக்கள்

1.தடகளம் 2.கூடைப்பந்து 3. குத்துச்சண்டை 4. கையுந்துபந்து 5. பளுதூக்குதல் 6. வாள்சண்டை 7. இறகுபந்து 8. ஹாக்கி மற்றும் 9. துப்பாக்கிச்சுடுதல்

மாணவியருக்கான விளையாட்டுக்கள்:

1.தடகளம் 2. குத்துச்சண்டை 3. கையுந்துபந்து 4. கால்பந்து 5. பளுதூக்குதல் மற்றும் 6. ஜுடோ,

விளையாட்டில் சிறந்து விளங்கும் மற்றும் ஆர்வம் கொண்டுள்ள மாணவ / மாணவியர் அதற்கான உரிய விண்ணப்ப படிவங்களை 01.04.2018 முதல் நேதாஜி விளையாட்டு அரங்கம் வேலூர், மாவட்ட விளையாட்டு அலுவலர் அலுவலர்களை அணுகி இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். www.sdat.tn.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை மேலாளர், சிறப்பு விளையாட்டு விடுதி, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், பெரியமேடு, சென்னை– 600 003 என்ற முகவரியில் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ கிடைக்குமாறு அனுப்ப வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டிய இறுதி நாள் 18.04.2018 அன்று காலை 8.00 மணி வரை.

சிறப்பு விளையாட்டு விடுதியில் சேர விரும்பும் மாணவ / மாணவியருக்கான மாநில அளவிலான தேர்வு 18.04.2018 அன்று 1) சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் (தடகளம் (ஆ/பெ), குத்துச்சண்டை(ஆ/பெ), கையுந்துபந்து (ஆ/பெ), பளுதூக்குதல் (ஆ/பெ), வாள்சண்டை(ஆ), துப்பாக்கிச் சுடுதல்(ஆ) கால்பந்து(பெ), ஜுடோ(பெ)) 2) சென்னை, நேரு உள் விளையாட்டரங்கம் (கூடைப்பந்து (ஆ)) 3) நேருப் பூங்கா விளையாட்டரங்கம் (இறகுப்பந்து (ஆ)) மற்றும் 4) சென்னை, மேயர் இராதகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கம், வலைகோல்பந்து(ஆ)) ஆகிய இடங்களில் நடைபெறும். தேர்வுப் போட்டியில் கலந்து கொள்ளும் மாணவ/ மாணவிகள் 18.04.2018 அன்று காலை 8.00 மணிக்குள் சம்மந்தப்பட்ட மையத்தில் ஆஜராகுமாறு தெரிவிக்கப்படுகிறது.

செ.மு.தொ.அ.
வேலூர்– 9.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
வேலூர்.